# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.166/2024
Prosecution witness for P.W.25.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. ஜேம்ஸ் அந்தோணிராஜ். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.08.2025.

A1 to A3 present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது வட்டார தடய அறிவியல் ஆய்வகம் திருநெல்வேலியில் உதவி இயக்குநராக பணியில் இருந்து ஓய்வு பெற்று தற்போது திருநெல்வேலியில் குடியிருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு மேற்படி ஆய்வகத்தில் உதவி இயக்குநராக பணியில் இருந்தபோது 23.04.2024 அன்று எட்டையபுரம் காவல்நிலைய குற்ற எண் 85/2024 வழக்கு சம்பந்தப்பட்ட ஐந்து வழக்கு மாதிரிகளை நீதித்துறை நடுவர் எண் 2, கோவில்பட்டி அவர்களின் கடிதத்துடன் ஆய்வகத்தில் சரியான முத்திரையுடன் பெறப்பட்டு அந்த மாதிரிகளை நான் ரசாயன பகுப்பாய்வு மேற்கொண்டேன். அதில் மாதிரி 1– சதை துண்டு பகுதி, மாதிரி 2– வலைத் துணிகள் 2, மாதிரி – 3, பழுப்புநிற துணிப்பகுதி, மாதிரி 4– சிறிய வலைத்துணிகள், மாதிரி –5 ஒரு சிறிய வலைத் துணி ஆகிய ஐந்து மாதிரிகள் இருந்தன. அவற்றில் 2 முதல் 5 மாதிரிகளில் ரத்தம் காணப்பட்டது. மாதிரி 1ல் ரத்தம் காணப்படவில்லை. மேற்படி மாதிரிகள் 2 முதல் 5 வரை உள்ள வழக்கு சொத்துக்களில் ரத்தம் காணப்பட்டது என்றும், மாதிரி 1ல் ரத்தம் காணப்படவில்லை என்றும் நான் வழங்கிய உயிரியல் அறிக்கை **அ.சா.ஆ 26**. மேலும் இதே வழக்கில் கடந்த

12.06.2024 அன்று நான்கு வழக்கு மாதிரிகள் மேற்படி நீதிமன்றத்திலிருந்து வேண்டுகோள் கடிதத்துடன் பெறப்பட்டன. மாதிரி 1–ல் சிறிது தார் கற்கள், மாதிரி 2–ல் சிறிது தார் கற்கள், மாதிரி 3–ல் சிறிய வலைத்துணி, மாதிரி 4–ல் ஒரு சிறிய வலைத் துணி ஆகியவை இருந்தன. மேற்படி நான்கு மாதிரிகளையும் நான் பரிசோதனை செய்தபோது அவற்றில் மாதிரி 3, 4 ல் ரத்தம் காணப்பட்டது. மாதிரி 1, 2 ல் ரத்தம் காணப்படவில்லை. அதுகுறித்து நான் வழங்கிய உயிரியல் அறிக்கை **அ.சா.ஆ 27**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

என்னை விசாரித்தது போலீசார் என்றும், ஆய்வாளர் விசாரிக்கவில்லை என்றும் சொன்னால் தவறு. போலீசார் என்ன பதவியில் இருந்தார் என்று எனக்குத் தெரியாது. என்னிடம் மாதிரிகளை கொடுத்த அதே போலீஸ்தான் விசாரித்தாரா என்றால் ஞாபகமில்லை. நான் 25 வருடங்களாக சட்டம் சார்ந்த ஆய்வகத்தில் பணியில் இருந்தேன். காவலர் யார், உதவி ஆய்வாளர் யார், ஆய்வாளர் யார், துணை கண்காணிப்பாளர் யார் என்பதை அவரது சீருடை மற்றும் பேட்ஜ் ஆகியவற்றை பார்த்து தெரிந்து கொள்ளும் திறன் எனக்கு உண்டு. எனக்கு வேண்டுகோள் கடிதம் கொண்டு வந்த போலீஸ் என்ன நிலையில் இருந்தார் என்பதை நான் கேட்டுத் தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். மாதிரிகள் எந்த தேதியில் என்னிடம் கொடுக்கப்பட்டதோ அந்த தேதியில்தான் போலீசார் என்னை பார்த்தார்கள் என்றும், அதற்கு பின்னிட்டு போலீசார் என்னை சந்திக்கவில்லை என்றும் சொன்னால் எனக்கு ஞாபகமில்லை. நான் வேதியியல் பிரிவில் முதுகலை பட்டம் பெற்றுள்ளேன். நான் உயிர் வேதியலில் நிபுணர் அல்ல. உயிரியல் பிரிவில் நிபுணர்தான் உயிரி சார்ந்த மாதிரிகளை பரிசோதிக்க வேண்டுமென்றால் சரிதான். போலீசார்

விசாரணையில் 23.04.2024 அன்று மாதிரிகள் காவலரால் நான் பணியில் இருந்தபோது கொடுக்கப்பட்டதாக சொன்னேன். மாதிரிகளை எந்த நீதிமன்றத்திலிருந்து எங்களுக்கு அனுப்பப்டுகிறதோ அந்த நீதிமன்றத்திற்குத்தான் பகுப்பாய்வு அறிக்கை அனுப்பப்பட வேண்டுமென்றால் சரிதான். போலீசாரிடம் மாதிரிகள் மற்றும் ஆய்வறிக்கையை கொடுத்தனுப்புவோம். இந்த வழக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பினோமா என்றால் முதல் நிலைக் காவலர் முத்து ராஜேஷ் என்பவரிடம் கொடுத்தனுப்பினோம். 11.06.2024 அன்று கொடுத்தனுப்பினோம். அ.சா.ஆ 26 மற்றும் 27 ஆகிய இரண்டையும் அதே தேதியில் கொடுத்தனுப்பப்பட்டதா என்றால் வேறு வேறு தேதிகளில் கொடுத்தனுப்பப்பட்டது. ஒரு அறிக்கையை 11.06.2024 லிலும், 2 வது அறிக்கையை 18.06.2024 லிலும் கொடுத்தனுப்பினோம். 11.06.2024 லிலும், 18.06.2024 லிலும் என்னை சந்தித்த காவலர்தான் கடைசியாக நான் பார்த்த காவலர் என்றால் ஞாபகமில்லை. மேற்படி மாதிரிகளை எங்கள் அலுவலகத்தில் பெற்றவர் உதவியாளர் என்றும், மாதிரிகளை சான்றுகளுடன் ஆய்வகத்திலிருந்து திருப்பி கொடுத்ததும் உதவியாளர் என்றும் சொன்னால் சரிதான். மேற்படி மாதிரிகளை சான்றுகளுடன் பெற்றுச் சென்றவர்தான் மேற்படி முத்துராஜேஷ். நான் காவலர்கள் யாரையும் நேரில் பார்த்ததில்லை. நான் சொன்ன தேதி மற்றும் நேரத்தில் எந்த பொருளும் ஆய்வகத்தில் ஒப்படைக்கப்படவில்லை என்றும், எங்களிடம் சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிகளை நான் ஆய்வு செய்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. நான் ரத்த மாதிரிகளை பகுப்பாய்வு செய்வதற்கு நிபுணத்துவம் பெற்ற நபர் அல்ல என்றால் சரியல்ல. ரத்தம் மாதிரிகளின் எல்லாவிதமான ரத்தங்களும் மற்றும் வகையான ரத்தங்களின் பகுப்பாய்வு முடிவில் என்ன வகையான ரத்தத்தை

பரிசோதனைக்கு உட்படுத்தினாலும் அது ரத்தம் என்ற குணத்தை காட்டுவதற்கு உள்ள ஆய்வு முடிவு ஒன்று என்றால் சரிதான். அ.சா.ஆ 26 மற்றும் 27 பிழையானது என்றால் சரியல்ல. என்னை போலீசார் விசாரித்ததாக சொல்வதும் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் காவலர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அதற்கு ஏதுவாக அவர்கள் கேட்ட தேதியை ஆய்வறிக்கையில் குறிப்பிட்டு தவறான அறிக்கையை வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

1, 3 எதிரிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.08.26 17:05:11 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.